P.L.RAJ IAS & IPS ACADEMY

Building Bureaucrats Since 2006

November 13, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகத்தில் சிறப்பு சுருக்கமுறை திருத்தப் பணிக்கு (எஸ்எஸ்.ஆர்) பிறகு 5.77 கோடி வாக்காளர்கள் கொண்ட வரைவுப் பட்டியல் வெளியிடப்பட்டது, அதில், ஆண் வாக்காளர்கள் 2,82,03,992 பேரும், பெண் வாக்காளர்கள் 2,95,34,734 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 7,892 பேரும் அடங்குவர்.
   i. சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு (எஸ்ஐஆர்), பிறகு சுமார் 4 லட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர். மாநிலத்திலேயே அதிகமான வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதியாக 5,58,729 வாக்காளர்களுடன் செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது. குறைந்த அளவு வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதியாக 1,20,852 வாக்காளர்களுடன் சென்னை மாவட்டத்தின் துறைமுகம் தொகுதி உள்ளது.

2. ஸ்பெயினில் நிலவும் கடும் வீட்டுவாடகை உயர்வுக்கு எதிராக நாடு தழுவிய பொது வேலைநிறுத்தம் நடைபெற்ற மறுநாளான வியாழக்கிழமை யன்று, வீட்டுவசதி பாதுகாப்புச் சட்டத்துக்கு நாடாளுமன்ற அந்நாட்டின் இடைக்கால கீழவை ஒப்புதல் அளித்துள்ளது.
   i. 69 உறுப்பினர்களைக் கொண்ட இடைக்கால அவையில் 35-34 என்ற வாக்கு வித்தியாசத்தில் நிறை வேற்றப்பட்ட இந்தச் சட்டத்தின்படி, 2030 வரை நிதி மற்றும் சமூகரீதியாகப் பின்தங்கிய குடியிருப்பாளர்களுக்கு மாற்று இடம் வழங்கப்படும் வரை, அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
   ii. மேலும், சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கு விடப்படும் வீடுகளுக்கு 10 சதவீத வரி விதிக்கவும், நிர்ணயிக்கப்பட்ட வரம்பை மீறிய வாடகை உயர்வைத் தடுக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள இந்தியா-ஆசியான் வரு டாந்திர மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க வுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வியாழக்கி ழமை தெரிவித்தது.

11 உறுப்பினர்களைக் கொண்ட ஆசியான் கூட்டமைப்புக்கு நிகழாண்டு பிலிப்பின்ஸ் தலைமை வகிக்கும் நிலையில், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக அந்நாட்டுக்கு நவ.16-ஆம் தேதி செல்லும் பிரதமர் மோடி வருடாந்திர கிழக்காசியா மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார்.

i. மேலும், மணிலாவில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உறுப்பினராகக் கொண்ட'க்வாட்' கூட்டமைப்பின் வருடாந்திர மாநாடும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், இதுகுறித்து அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

ii. இதுதொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சக செயலர் (கிழக்கு) ருத்ரேந்திர டாண்டன் கூறியதாவது: மணிலாவில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள 23-ஆவது ஆசியான்-இந்தியா வருடாந்திர மாநாடு மற்றும் ஆசியான் தலைமையிலான கிழக்காசிய மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கவுள்ளார்.

iii. பிலிப்பின்ஸுக்கு நவ.16 முதல் நவ.18 வரை அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளும் அவர், நவ.17-ஆம் தேதி இந்த இரு மாநாடுகளிலும் பங்கேற்கிறார்.

iv. பயணத்தின் ஒரு பகுதியாக, பல்வேறு துறைகளில் இந்தியா-பிலிப்பின்ஸ் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து பிலிப்பின்ஸ் அதிபர் ஃபெர்டினண்ட் மார்கோஸுடன் ஆலோசனை நடத்தவுள்ளார் என்றார்.

4. ரஷியாவிடமிருந்து அக்டோபர் மாதத்தில் இந்தியா இறக்குமதி செய்த புதைபடிம எரிபொருள் மதிப்பு ரூ.67,000 கோடி என்ற சாதனை அளவை எட்டியுள்ளது. இது குறித்து எரிசக்தி மற்றும் தூய்மைவாயுமீதான ஆராய்ச்சி மையம் (சி.ஆர்இஏ) வெளியிட்ட மாதாந்திர ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:

i. ரஷியாவிடமிருந்து கடந்த அக்டோபர் மாதத்தில் ரூ.67,000 கோடி (6.4 மில்லியன்) மதிப்பில் ஹைட்ரோகார்பன்களை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இது, கடந்த 2022-ஆம் ஆண்டு ஜனவரி முதல் பதிவான தரவுகளின்படி, மிக உயர்ந்த மாதாந்திர அளவாகும்.

ii. இதில், ரூ. 60,000 கோடி மதிப்பில் கச்சா எண்ணெய்யையும், மீதமுள்ள தொகையில் நிலக்கரி மற்றும் பிற எண்ணெய் பொருள்களையும் இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

iii. ரஷிய எரிபொருள்களை வாங்கும் நாடுகளில் சீனா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. ரஷியாவின் எரிபொருளை அதிக அளவில் இறக்குமதி செய்யும் முதல் ஐந்து நாடுகளின் பங்களிப்பில் சீனாவின் பங்கு $1 சதவீதமாக (ரூ.1.1 லட்சம் கோடி) உள்ளது. இந்தியா தொடர்ந்து இரண்டாம் இடத்தில் உள்ளது.

iv. இந்தியாவின் அக்டோபர் மாத ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதி, முந்தைய மாதத்தைவிட 10 சதவீதம் கூடுதலாகியுள்ளது. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், நயாரா எனர்ஜி ஆகிய மூன்று மிகப் பெரிய இந்திய சுத்திகரிப்பு நிலையங்களின் ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதியும் அதிகரித்துள்ளது.

v. ரஷியாவின் புதைபடிம எரிபொருள்களை வாங்கும் நாடுகளின் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் மூன்றாவது இடத்தில் இருந்தது. இது ரஷியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாயில் 11 சதவீதமாகும்.

vi. ரூ.11,000 கோடி மதிப்பிலான இறக்குமதியுடன் துருக்கி நான்காம் இடத்திலும், ரூ.5,000 கோடி மதிப்பிலான இறக்குமதியுடன் தென் கொரியா ஐந்தாம் இடத்திலும் உள்ளன.

5. கார்களை வாடகைக்கு விடும் நிறுவனத்தை தொடங்குவதற்கு 50 கார்கள் தேவை என்ற எண்ணிக்கையை 5-ஆக குறைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

i. சுற்றுலாப்பயணிகள் சொந்தமாக கார்களை ஓட்டிச் செல்லும் வகையில், கார்களை வாடகைக்கு விடும் நிறுவனங்கள் தற்போது அதிகரித்து வருகின்றன. இத்தகைய நிறுவனத்தை தொடங்க தற்போது 50 கார்கள் இருக்க வேண்டும் என்ற விதி உள்ளது. இந்நிலையில் அந்த எண்ணிக்கையை 50-இல் இருந்து 5-ஆக குறைக்க மத்திய சாலைப் போக்குவ ரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

ii. 'வாடகை கார் திட்டம்-2026' என்ற பெயரில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் வரைவை உருவாக்கியுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

- கார்களை வாடகைக்கு விடும் நிறுவனத்தை தொடங்குவதற்கு, அதன் உரிமையாளரிடம் குறைந்தது 5 கார்கள் இருக்க வேண்டும். கார்கள் இயக்கப்படும் வழித் தடத்தில் தலா 2 கார்களாவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தத் திட்டத்திற்கான கார்களுக்கு விரிவான காப்பீடு செய்திருக்க வேண்டும். அந்த காப்பீடானது, கார்களை

வாடகைக்கு எடுப்போர், ஓட்டுநர், அந்த கார்களின் வாடகைக்குப் பயணம் செய்வோருக்கான காப்பீட்டையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

- வாகன சட்டம் தொடர்பான விதிகளை மீறிய குற்றச்சாட்டுகளுக்காக விதிக்கப்பட்ட அபராதம் எதுவும் நிலுவையில் இருக்கக் கூடாது. காவல் துறையின் குற்றப்பதிவேட்டில் அந்த வாகனம் இடம்பெற்றிருக்கக் கூடாது என்று அந்த வரைவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டம், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமலுக்கு வரும் என கூறப்படுகிறது. அப்படி அமலுக்கு வந்ததும், வாடகைக்கு கார்களை விடும் தொழிலில் மேலும் பலர் ஆர்வம் காட்டக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. தவித்த வாய்க்குத் தண்ணீர்!

(i) நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவி

- 2026–27ஆம் நிதியாண்டுக்கான மாநில பட்ஜெட்டில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ரூ.29,800 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.
- இதில், குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு (TWAD) ரூ.340 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளின் பெரும்பாலான குடிநீர் திட்டங்களுக்கு உலக வங்கி (World Bank), ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் நிதியுதவி வழங்குகின்றன.
- இத்தகைய நிதி நிறுவனங்கள், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலக்கெடு, திருப்பிச் செலுத்தும் முறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிர்ணயிக்க வேண்டிய குடிநீர்க் கட்டணங்கள் தொடர்பாகக் குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை விதிக்கின்றன.

(ii) குடிநீர்க் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு மற்றும் பாட்டில் குடிநீர் வணிகம்

- நிதியுதவி வழங்கும் நிறுவனங்களின் வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு குடிநீர் இணைப்புக்கும் நீர் அளவைக் கணக்கிடும் மீட்டர்களைப் பொருத்துவதுடன், குடிநீர்க் கட்டணத்தையும் உயர்த்தப் பரிந்துரைக்கப்படுகிறது.
- குடிநீர்க் கட்டணத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பை ஏற்படுத்துகின்றன. இதனை எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிரான மனநிலையை உருவாக்கப் பயன்படுத்துகின்றன.

- ஆண்டுக்கு வெறும் ரூ.100 குடிநீர்க் கட்டணத்தை உயர்த்துவதற்கான முன்மொழிவுக்குக்கூட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.
- பொது குடிநீர்க் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அதேவேளையில், தமிழ்நாட்டில் தனியார் நிறுவனங்களின் பாட்டில் குடிநீர் விற்பனை ஆண்டுக்கு ரூ.3,000 கோடியை எட்டியுள்ளது.
- சென்னையில் மட்டும் நாளொன்றுக்கு 2 கோடி லிட்டர் பாட்டில் குடிநீர் விற்பனை செய்யப்படுகிறது. 20 லிட்டர் குடிநீர் கேன்களுக்காகப் பொதுமக்கள் நாளொன்றுக்கு ரூ.4 கோடி வரை செலவிடுகின்றனர்.
- ஐஐடி நடத்திய ஆய்வின்படி, குழாய் மூலம் குடிநீர் இணைப்பு பெற்றுள்ள ஒரு குடும்பம் சராசரியாக மாதம் ரூ.553-ஐ குடிநீருக்காகச் செலவிடுகிறது.

(iii) குடிநீரின் தரக்குறைபாடுகள் மற்றும் தனியார் நீர் சுத்திகரிப்பு

- நகராட்சி நிர்வாகம் வழங்கும் குடிநீரின் தரம் குறைவாக இருப்பதே மக்கள் கேன் குடிநீரைச் சார்ந்திருப்பதற்கான முக்கியக் காரணமாகும். பழமையான நிலத்தடி குடிநீர்க் குழாய்கள் அடிக்கடி உடைவதால், மழைநீரும் கழிவுநீரும் குடிநீருடன் கலக்கும் நிலை ஏற்படுகிறது.
- மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சுத்தம் செய்யப்பட்டதாகப் பதிவேடுகளில் மட்டும் குறிப்பிடப்படுகின்றன. ஆனால், உண்மையில் அவை முறையாகச் சுத்தம் செய்யப்படுவதில்லை.
- நகர்ப்புறக் குடும்பங்கள் குளிப்பது, துணி துவைப்பது, செடிகளுக்கு நீர் ஊற்றுவது போன்ற தேவைகளுக்கு நகராட்சி வழங்கும் நீரைப் பயன்படுத்துகின்றன. ஆனால், குடிப்பதற்கும் சமையலுக்கும் தனியார் நிறுவனங்களின் கேன் குடிநீரை வாங்குகின்றன.
- நிலத்தடி நீரைச் சுத்திகரித்து குடிப்பதற்கும் சமையலுக்கும் பயன்படுத்தும் வகையில், அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகளில் தலைகீழ் சவ்வூடுபரவல் (Reverse Osmosis – RO) சுத்திகரிப்பு அமைப்புகள் அதிகரித்து வருகின்றன.

(iv) கட்டமைப்பு ரீதியான பரிந்துரைகள் மற்றும் கொள்கைத் தீர்வுகள்

- ஒவ்வோர் ஆண்டும் பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் நிதி உண்மையான குடிநீர் வழங்கலுக்காகப் பயன்படுத்தப்படுகிறதா அல்லது பொதுவான பயன்பாட்டுக்கான நீர் விநியோகத்திற்காக மட்டுமே செலவிடப்படுகிறதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

- பொதுப்பணித்துறை கட்டுமானப் பிரிவு மற்றும் நீர்வளப் பிரிவு எனப் பிரிக்கப்பட்டதைப் போல, நீர் விநியோகப் பணிகளையும் இரண்டு தனித்தனி பிரிவுகளாகப் பிரிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது:
    - பொதுவான பயன்பாட்டிற்கான நீர் விநியோகப் பிரிவு.
    - பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் பிரிவு.
- சிங்கப்பூரின் இரட்டை குழாய் முறை (Dual-Piping Model): சிங்கப்பூரில் நடைமுறையில் உள்ளதைப் போல, குடிப்பதற்கான நீர் மற்றும் இதர பொதுப் பயன்பாடுகளுக்கான நீர் ஆகியவற்றைத் தனித்தனி குழாய்கள் மூலம் விநியோகிக்கும் முறையை அறிமுகப்படுத்தலாம்.
- உடனடித் தற்காலிகத் தீர்வாக, குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறிப்பிட்ட அளவு குடிநீரை உள்ளாட்சி அமைப்புகள் குடிநீர் லாரிகள் மூலம் இலவசமாக வழங்கலாம். இதன் மூலம் நடுத்தர வர்க்கத்தினரின் பொருளாதாரச் சுமையைக் குறைக்க முடியும்.
- கண்காணிப்பின்றிச் செயல்படும் தனியார் குடிநீர் நிறுவனங்களைக் கட்டுப்படுத்த அரசு தலையிட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் குறைந்த விலையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பாட்டில்களை வழங்கிய முந்தைய 'அம்மா குடிநீர்' திட்டம் இதற்கு முன்னுதாரணமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.
- பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம், மாதம் ரூ.1,000 உரிமைத்தொகை போன்ற நலத்திட்டங்களை அரசு வழங்கும் நிலையில், அடிப்படைத் தேவையான குடிநீருக்குக்கூட மக்கள் பணம் செலுத்த வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துவது ஒரு நலஅரசின் (Welfare State) அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானதாகும்.